**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 136/2020**

**வா.சா.1 –தேசமணி**

**<u>04–08–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 2ம் பிரதிவாதி காமராஜ் எனது தாய் மாமன். அவரது சொந்த ஊர் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வடசங்கந்தி. 1ம் பிரதிவாதி கடந்த 20 ஆண்டு காலமாக சிங்கப்பூரில் உள்ளார். நான் திருப்பூர் வந்து 20 வருடம் ஆகிறது. 2ம் பிரதிவாதி திருப்பூர் வந்து என்னை பார்த்தது இல்லை என்றால் அவரது மகன் எங்கள் வீட்டில் தான் இருந்தார். அவரது மகன் என்னை பார்த்துள்ளார். எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் 1ம் பிரதிவாதி உறவினர் இல்லை என்றால் பிரதிவாதிகள் இருவரும் சிங்கப்பபூரில் ஒன்றாக வேலை செய்தார்கள். இருவரும் வெவ்வேறு நிறுவனத்தில் சிங்கப்பூரில் வேலை செய்தார்கள். நிறுவனத்தின் பெயர் தெரியாது.

2. 1ம் பிரதிவாதி சிங்கப்பூரில் வேலை பார்கவில்லை என்றும் அவர் சிங்கப்பூர் சென்றதில்லை என்றும், 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதியை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் இருவருக்கு அறிமுகம் உள்ளதற்கு என்னால் ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். 1ம் பிரதிவாதியை 2ம் பிரதிவாதிக்கு தெரியாத காரணத்தினால்தான் 1ம் பிரதிவாதியின் கைபேசி எண், வங்கிகணக்கு எண் மற்றும் முகவரியை 2ம் பிரதிவாதி எனக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சொல்லி 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் பணம் போட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு கெனடா நாட்டிற்கு சென்றது இல்லை என்றால் அவர் அங்கு சென்றதில்லை ஆனால் அங்கு உள்ளவர்ளை அவருக்கு தெரியும்.

3. கெனடா நாட்டின் எந்த மாநிலத்தில், எந்த நிறுவனத்தில் என்ன வேலையை என்ன சம்பளத்தில் எனக்கு வாங்கி தருவதாக 2ம் பிரதிவாதி கூறினார் என்றால் முதலில் பணத்தை கட்டசோன்னார் அதன் பிறகு விபரத்தை சொல்வதாக சொன்னார். அவர் யாருக்கும் வேலைவாங்கி கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் மீது 5 வழக்குகளை நான் தாக்கல் செய்துள்ளேன். அதில் அ.வ. எண். 125/2020 தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் கெனடா நாட்டில் அவர் வேலை வாங்கி தருவதாக சொல்லியிருந்ததாகவும் அவர் கேட்டுக்கொண்டார் ரேவதி என்பவர் கணக்கில் பணம் போட்டதாக அவ்வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 2ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். **அவ்வழக்கின் தீர்ப்புரை கணினி நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 2ம் பிரதிவாதிக்கு எதிராக அ.வ. எண். 126/2020 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதன் வழக்குரை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். **அவ்வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உண்ணாமலையில் வங்கி கணக்கிற்கு 2ம் பிரதிவாதி சொல்லி பணம் செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா தொகை கேட்டு 2ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் சிங்கப்பூர் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். அதனை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மற்ற வழக்குகளிலும் நான் அறிவிப்பு வழங்கவில்லை என்றால் சரியல்ல.

5. 2ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் நான் பணத்தை போடவில்லை என்றும் அவரும் என்னை திருப்பூரில் சந்திக்கவில்லை என்பதால் 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. என்னை தொலைபேசியில் அழைத்து பணத்தை போடசொன்னதால் போட்டேன். 2ம் பிரதிவாதி வேதாரண்யத்தில் உள்ள அவரது வீட்டில் தான் இந்தியாவிற்கு வந்தால் தங்குகிறார். அவர் அங்கு 25 ஆண்டுகளாக உள்ளார். எனக்கு எனது மாமாவிற்கும் சொத்து தகராறு உள்ளதால் சுமுக உறவு இல்லை என்றால் சரியல்ல. அதனால் 2ம் பிரதிவாதி எனக்கோ எனது தாயாருக்கோ போன் செய்தது இல்லை, நேரில் பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. போன் பேசியுள்ளார். விடுமுறைக்கு வரும்போது வடசங்கந்தியில் உள்ள வீட்டில் பேசியுள்ளார்.

6. சிங்கப்பூரில் அவர் பயன்படுத்தும் போன் அந்த நிறுவனத்திற்கு சொந்தமான போன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை பற்றி அவர் எந்த தகவலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் மற்ற வழக்குகளில் உள்ள 1ம் பிரதிவாதி என்னுடன் பனியன் கம்பனியில் வேலை செய்தவற்கள் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தவர் என்பதால் தான் 1ம் பிரதிவாதி வங்கி கணக்கில் பணத்தை நான் செலுத்திவிட்டு 2ம் பிரதிவாதி சொல்லி போட்டதாக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கையெழுத்திட்ட எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கையெழுத்திட்ட ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு எதிராக ஆவணமோ வழக்குமூலமோ இல்லை என்பதால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.